**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 68/2024 - PW-9**

| | |
|---|---|
| Name | திரு. கார்த்திக் குமார் |
| Husband/Father Name | மூர்த்தி |
| Village /Area | சிறுவளையம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.01.2026.

**(எதிரிகள் 2 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சம்பவ நாளன்று நான் ஊரிலே இல்லை. மறுநாள் ஜேசிபி வண்டியில் வந்த ஒருவரை அடித்ததாக கூறினார்கள். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

16.12.2021 ம் தேதி இரவு சுமார் 11.30 மணி அளவில் நான் என் வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது திடீரென டமார் என சத்தம் கேட்டதாகவும் கேசவன் வீட்டருகே சென்ற போது கேசவன் புதிதாக கட்டிய வீட்டிலுள்ள போர்டிகோ சிமெண்ட் பில்லரை இடித்து நின்று இருந்ததாகவும் அதில் சுமார் 22 வயது மதிக்கதக்க ஒருவர் உட்காந்து இருந்ததாகவும் அவரை சுற்றி 5 நபர்கள் அசிங்கமாக பேசி கீழே இறங்குடா என்று கூறியதாகவும் அதில் 4 நபர்கள் ஜேசிபி உடைய கண்ணாடியை உடைத்ததாகவும் அதில் ஒருவர் ஜேசிபி வண்டி மேலே ஏறி உட்காந்து இருந்த நபரை அசிங்கமாக பேசி கத்தியால் வெட்டியதாகவும் அதை அடிப்பட்ட நபர் தனது கைகளால் தடுத்த போது அவரது கை விரல்கள் துண்டானதாகவும் தலையில் வெட்டு காயம் ஏற்பட்டதாகவும் மேலும்

மற்றொரு நபர் சக்கை கல்லை எடுத்து ஏற்கனவே மயக்கமடைந்த நபரின் மார்பின் மீது இதோடா செத்து போடா என்று ஓங்கி குத்தியதாகவும் பின்னர் அருகிலிருந்த கொம்பை எடுத்து தலையின் மீதும் மார்பின் மீதும் மாறி மாறி அடித்ததாகவும் அந்த வண்டியில் உட்காந்து கொண்டிருந்த நபர் அய்யயோ என்று கத்தியதாகவும் பின்னாடி இருந்த நபர்கள் அவரை கைகளால் மாறி மாறி முகத்தின் மீதும் மார்பின் மீதும் அடித்ததாகவும் அப்போது பின்னாடி நின்று கொண்டிருந்த ஒருவர் வேண்டாம் விட்டுவிடுங்கடா என்று கூறியதாகவும் அப்போது எதிரிகள் நீ கிட்ட வந்தால் உன்னையும் அடித்து ஒய்த்து விடுவோம் என்று கூறியதாகவும் பிறகு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் காயம்பட்ட சக்திவேலை அவரது மைத்துனர் செந்தில்குமார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் இந்த சம்பவம் குறித்து செந்தில்குமார் என்னிடம் சக்திவேலுக்கும் அருள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாகவும் இதன் காரணமாக 16.12.2021 ம் தேதி இரவு சக்திவேல் வீட்டிடம் நிறுத்தி வைக்கபட்டிருந்த ஜேசிபியை யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு போய் அருளின் வீட்டை இடித்ததாகவும் அப்போது அருள் அவரது மகன் தினேஷ், அருளின் உறவினர்கள் கலையரசன், சதிஷ், நந்தகுமார் ஆகியோர் சக்திவேலை ஜேசிபியுடன் துறத்தி கொண்டு சென்றதாகவும் அப்போது கேசவன் வீட்டருகே அவரை எதிரிகள் தாக்கியதாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:47:43 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.